[2009 ஜூலை 1

2. தகவல் கோரல்

(அ) தமிழகத்திலிருந்து மணல் கடத்தப்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கடந்த மாதம் 17 ஆம் தேதியில் இருந்து, இன்று வரை-தமிழகத்தில் இருந்து மணல் கடத்தப்படுகிறது. எவ்வளவு சட்டங்கள் இருந்தாலும், மாநிலத்திற்குள்ளேயே மணல் விற்கப்பட வேண்டும் என்று இருந்தாலும், மாநிலத்திற்கு மாநிலம் செல்கிறது. அதற்கும் மேலே மாலத்தீவை நோக்கி இன்றைக்குத் தமிழ்நாட்டிலே இருந்து மணலைக் கப்பலிலே கொண்டு செல்கிற நிலை இருக்கிறது—இதைப்பற்றி நாங்கள் விவாதிக்க வேண்டும் என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதைப்பற்றி விவாதிப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி வழங்குவார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது; பின்னர் எடுப்போம். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) சொல்லிவிட்டேன்? இல்லையா? நீங்கள் சொன்னதுதானே? திரும்பத் திரும்ப எழுந்திருக்கக்கூடாது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தொடர்ந்து 17 ஆம் தேதியில் இருந்து கொடுத்துக்கொண்டிருக்கிறோம் எனறு சொன்னோம். ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து, அதைப்பற்றி நீங்கள், 'ஆய்வில் இருக்கிறது' என்று சொல்வதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திரு. எஸ்.வி. சேகர் தவிர, மற்ற அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)